**பள்ளிக்கல்வி ஆணையர் மற்றும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் இணைச் செயல்முறைகள், சென்னை – 600 006.**

**ந. க. எண். 6184/G3/2022, நாள். .11.2022.**

பொருள்: பள்ளிக்கல்வி – உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் – 6 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு வினாடி வினா நடத்துதல் – சார்ந்து.

பார்வை: தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் இணைச் செயல்முறைகள், சென்னை – 6, ந.க.எண். 019528/எம்/ இ1/2022, நாள். 11.06.2022.

*****

அரசுப்பள்ளிகளில் உயர்தொழில்நுட்ப ஆய்வகத்தில் நடத்தப்பட்ட வினாடி வினா போட்டிகளில் சிறப்பாகச் செயல்பட்ட அரசுப்பள்ளி மாணவர்கள் மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் ஐக்கிய அரபு அமீரக நாடுகளில் உள்ள துபாய், ஷார்ஜா மற்றும் அபுதாபி ஆகிய நகரங்களுக்கு நான்கு நாட்கள் கல்விச்சுற்றுலா சென்று வந்தனர்.

2022–23 ஆம் ஆண்டு கல்வி மானியக் கோரிக்கையின்போது பள்ளிக்கல்வித்துறை அமைச்சரின் அறிவிப்புகளில் கல்வி, கலை, கலாசாரம் மற்றும் விளையாட்டு ஆகிய துறைகளில் சிறப்பாகச் செயல்படும் மாணவர்களை வெளிநாடுகளுக்குக் கல்விச்சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவர் என அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, பார்வையில் கண்ட செயல்முறைகளில், இந்த ஆண்டு நடைபெறவுள்ள வினாடி வினா போட்டிகளில் சிறப்பாகச் செயல்படும் மாணவர்களை மே மாதத்தில் அயல்நாட்டுக் கல்விச்சுற்றுலா அழைத்துச் செல்லத் திட்டமிடப்பட்டுள்ளது. மாணவ மாணவியர் மட்டுமல்லாமல் சிறப்பாகச் செயல்படும் ஆசிரியர்களும் தலைமையாசிரியர்களும் இக்கல்விச்சுற்றுலாவில் பங்கு பெறுவர்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசுப்பள்ளிகளிலும் உள்ள உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள்/ கணினி ஆய்வகங்கள் வாயிலாக 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும்

அனைத்து மாணவர்களுக்கும் அந்தந்த மாதத்திற்கான பாடத்தலைப்புகளில் நவம்பர் 21, 2022 முதல் கணினி வழியாக வினாடிவினா போட்டிகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

வினாடிவினா போட்டிகள் எந்தெந்த வகுப்புகளுக்கு எந்தெந்த நாட்களில் நடத்துவது என்பது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. இப்போட்டிகளுக்கான வினாக்களை பள்ளியின் ஆசிரியர் / தலைமையாசிரியரே முடிவு செய்துகொள்ளலாம். இத்தேர்வுகளுக்கான வினாத்தாள்கள் யாவும் அரசுப்பள்ளி ஆசிரியர்களால் வடிவமைக்கப்பட்டு உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் வழியாக இணைய வழியில் வழங்கப்பட உள்ளன.

அனைத்து அரசுப்பள்ளிகளில் அமைந்துள்ள உயர்தொழில்நுட்ப ஆய்வகக் கணினிகளையும் அங்குள்ள கம்பிவட இணைய இணைப்பையும் (LAN) இயங்கு நிலையில் வைத்திருக்கப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

17/11/22

**மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி**
**மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர்**
**மற்றும்**
**பள்ளிக்கல்வி ஆணையருக்காக**

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை – 6

குறிப்புகள்:

விரிவான விளக்கங்களுடன் கூடிய காணொலி இணைப்பு TN SED Youtube channel–இல் 'Assessment Scheduler' என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. முழு காணொலியைக் காண இந்த இணைப்பைச் சொடுக்கவும். https://youtu.be/DvWI6WD5d8U

வினாடி வினா போட்டிகளுக்குப் பதிவு செய்யும்போதும்/பங்குபெறும்போதும் எழும் ஐயங்களுக்கான தீர்வுகள் பெறுவதற்காக 100004 என்ற எண்ணை உயர்தொழில்நுட்ப ஆய்வகங்களிலுள்ள IP phone – லிருந்து அழைக்கவும்.

உயர்தொழில்நுட்ப ஆய்வகத்தில் அமைந்துள்ள சர்வர் கணினியில் (Server Computer) http://locsrv.in:8080 என்னும் இணைய முகவரியில் நுழைந்து தங்கள் பள்ளியின் U–DISE எண்ணைச் சரியாகக் குறிப்பிட்டு பதிவு செய்து கொள்வதற்குப் பள்ளித் தலைமை ஆசிரியர்களை அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கே ட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

***Schedule for Secondary & Higher Secondary digital assessments through Hi-Tech Labs***

| Round | Date | Standard & Group | Subjects | Syllabus | No. of questions |
|---|---|---|---|---|---|
| 1 | 21/11/2022 to 25/11/2022 | 12 General & Voc. | Tamil<br>English<br>Groupwise :<br>General subjects<br>Vocational subjects | June to November | 30 (5 per subject) |
| 1 | 21/11/2022 to 25/11/2022 | 11 General & Voc. | Tamil<br>English<br>Groupwise :<br>General subjects<br>Vocational subjects | June to November | 30 (5 per subject) |
| 1 | 28/11/2022 to 02/12/2022 | 10 | Tamil<br>English<br>Mathematics<br>Science<br>Social Science | Term 2 - October November | 30 (6 per subject) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 28/11/2022 to 02/12/2022 | 9 | Tamil<br>English<br>Mathematics<br>Science<br>Social Science | Term 2 - October November | 30 (6 per subject) |
| 1 | 28/11/2022 to 02/12/2022 | 8 | Tamil<br>English<br>Mathematics<br>Science<br>Social Science | June to November | 30 (6 per subject) |
| 1 | 28/11/2022 to 02/12/2022 | 7 | Tamil<br>English<br>Mathematics<br>Science<br>Social Science | June to November | 30 (6 per subject) |
| 1 | 28/11/2022 to 02/12/2022 | 6 | Tamil<br>English<br>Mathematics<br>Science<br>Social Science | June to November | 30 (6 per subject) |

| Round | Date | Standard & Group | Subjects | Syllabus | No. of questions |
|---|---|---|---|---|---|
| 2 | 05/12/2022 to 09/12/2022 | 12 General & Voc. | Tamil<br>English<br>Groupwise :<br>General subjects<br>Vocational subjects | June to December | 30 (5 per subject) |
| 2 | 05/12/2022 to 09/12/2022 | 11 General & Voc. | Tamil<br>English<br>Groupwise :<br>General subjects<br>Vocational subjects | June to December | 30 (5 per subject) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | 12/12/2022 to 16/12/2022 | 10 | Tamil<br>English<br>Mathematics<br>Science<br>Social Science | Term 2 - October November December | 30 (6 per subject) |
| 2 | 12/12/2022 to 16/12/2022 | 9 | Tamil<br>English<br>Mathematics<br>Science<br>Social Science | Term 2 - October November December | 30 (6 per subject) |
| 2 | 12/12/2022 to 16/12/2022 | 8 | Tamil<br>English<br>Mathematics<br>Science<br>Social Science | June to December | 30 (6 per subject) |
| 2 | 12/12/2022 to 16/12/2022 | 7 | Tamil<br>English<br>Mathematics<br>Science<br>Social Science | June to December | 30 (6 per subject) |
| 2 | 12/12/2022 to 16/12/2022 | 6 | Tamil<br>English<br>Mathematics<br>Science<br>Social Science | June to December | 30 (6 per subject) |